புதுமலர்: 21 இதழ்: 04 ஆடி - ஆவணி

# அனல்

01.07.2024

ஆசிரியர்:
போதகர் வே.மகாராஜா

அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்
ஆவியிலே அனலாயிருங்கள்:
கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்.
- ரோமர் 12:11 -



## பெருமையும்;
## பெருமை கொண்டுவரும்
## விளைவுகளும்!

சீயோன் தேவாலயப் பிரசுரம் Zion Church Publication

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்


01. அனலின் குரல்
02. கதையும் கற்றதும்
03. நற்செய்திப்பகுதி
05. வினா விடை - 122
04. சிறுவர் வட்டம்
06. குறுக்கெழுத்துப்போட்டி - 120
07. வாலிபர் வளாகம்
08. பெண்கள் பக்கம்
09. அருட்பணியாளர் சரிதை
10. அனலின் ஆன்மீக விருந்து
11. கெட்ட பையனா?
12. தேவன் தந்த வைரங்கள்




## ஜெப வேண்டுதல்

வியாதியினாலும், வேதனையினாலும், குடும்ப பிரச்சினையினாலும் கலக்கமுற்று என்ன செய்வது என்று அறியாமல் திகைக்கும் தாயே, தந்தையே, சகோதரனே, சகோதரியே கலக்கம் வேண்டாம். உங்கள் பிரச்சினைகளையும் தேவைகளையும் எங்களுக்கு எழுதுங்கள். உங்களுக்காக ஜெபிப்போம்.

### எழுத வேண்டிய முகவரி:




சீயோன் ஜெபக்குழு,
இல 29, 29/1,
இராமையாச் செட்டியார் ஒழுங்கை,
யாழ்ப்பாணம், இலங்கை.

Zion Prayer Group,
No: 29, 29/1 Ramaiah Chettiar Lane,
Jaffna, Sri Lanka.


### மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:


ஆசிரியர் "அனல்",
இல 29, 29/1, இராமையாச் செட்டியார் ஒழுங்கை,
யாழ்ப்பாணம், இலங்கை.


The Editor "Anel",
No: 29, 29/1 Ramaiah Chettiar Lane,
Jaffna, Sri Lanka.




T.P.: 0094(0) 21-222 2707 e-mail: jazion@sltnet.lk

திக்கற்றவர்களாய் போகும் உன் பிள்ளைகளை ஒப்புவி, நான் அவர்களை உயிரோடே காப்பாற்றுவேன். உன் விதவைகள் என்னை நம்புவார்களாக – எரேமியா 49:11 –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அனலின் குரல்

இரட்சகர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். மீண்டும் இச் சஞ்சிகை வழியாக உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சி.

தேவனுடைய கரம் இம்மட்டும் எங்களைத் தாங்கி நடத்தியது. வரும் காலங்களெல்லாம் எம்மைத் தாங்கி நடத்துவாராக. இஸ்ரவேல் ஜனங்களை வனாந்தரத்திலே நடத்தியவர், போஷித்தவர் இன்றும் செயலாற்றிக் கொண்டேயிருக்கிறார்.

நாம் அவருக்குப் பிரியமாக எம் வாழ்வை வாழும்போது எமக்குரிய அனைத்தையும் தேவன் தந்தருளுவார். இஸ்ரவேலர்கள் குறைவைக் கண்ட போது முறுமுறுத்தார்கள்.

எந்தச் சூழ்நிலையைக் குறித்தும் தேவனை குற்றப்படுத்த வேண்டாம். தேவனின் விருப்பத்தை நிறைவேற்றுங்கள். அவருடைய நீதியைச் செய்யுங்கள். அவருடைய ராஜ்யத்தைத் தேடுங்கள். அப்போது உங்களுக்குரிய அனைத்தையும் தேவன் கொடுப்பார்.

உங்களுக்குரியதைத் தேடினால் தேவனை விட்டுவிடுவீர்கள். தேவனுக்குரியதைத் தேடினால் உங்களுக்குரியது கொடுக்கப்படும். வரும் நாட்கள் ஆசீர்வாதமாக உங்கள் ஒவ்வொருவருக்கும் அமையட்டும். தேவனை முழு இருதயத்தோடும் தேடுங்கள்.

'கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக'

- ஆசிரியர் -


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கதையும் கற்றதும்

## அன்போடு இருங்கள்

❒ வை. விமலதாஸ்

ஒரு இளைஞன் வெளியூர் சென்று திரும்பும்போது பாலைவனத்தின் வழியே திரும்ப நேர்ந்தது. அப்போது ஒரு சுனையில் நீரை கண்டான்.

ஆவலுடன் ஓடிச்சென்று நீரை பருகியவன், அந்த நீரின் சுவையில் அளவற்ற மகிழ்ச்சியடைந்தான்.

அப்போது அவனுக்கு ஒரு யோசனை தோன்றியது, தனது உயிர் நண்பனுக்கு அந்த நீரை கொடுத்தால் அவன் மிகவும் மகிழ்ச்சியடைவான் என்று கருதி, தன்னுடைய தோல் பையில் அந்த நீரை கொஞ்சம் நிரப்பிக் கொண்டான்.

நான்கு நாட்கள் பயண முடிவில் தன்னுடைய ஊரைச் சென்றடைந்தவன், நேராக தன்னுடைய நண்பனின் வீட்டிற்குச் சென்று நண்பனிடம் அந்த நீரின் அருமை பெருமைகளை கூறி, உலகிலேயே இது போல சுவையான நீர் இருக்கமுடியாது இதைக் குடித்துப்பார் என்று கூறி, அதை அவனுக்கு அளித்தான்.

நண்பன் சிறிதும் தாமதிக்காமல் மொத்த நீரையும் குடிக்க ஆரம்பித்தான்.

இதை அருகே அமர்ந்து கவனித்துக்கொண்டிருந்த நண்பனின் மனைவி, 'எனக்கும் கொஞ்சம் நீரை கொடுங்கள். எனக்கும் அதைக் குடிக்க ஆசையாக இருக்கிறது' என்று கூற, அவள் கூறியதை காதில் வாங்கிக்கொள்ளாமல் மொத்த நீரையும் குடித்து முடித்துவிட்டான் நண்பன்.

'பிரமாதம்... உண்மையில் இதுபோல சுவையான ஒரு நீரை நான் இது வரை என் வாழ்க்கையில் அருந்தியதேயில்லை. உனக்கு எவ்வளவு நன்றி சொன்னாலும் தகும்'. என்று வாழ்த்தி அனுப்புகிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைஞன் தனது நண்பனுக்கு அந்த நீரைக் கொடுத்த சந்தோஷத்தில் விடைபெற்றுச் சென்றான்.

அவன் சென்ற பிறகு, நண்பனின் மனைவி அவனைப் பார்த்து 'இருந்தாலும் உங்களுக்கு இத்தனை சுயநலம் கூடாது. அந்த நீரை எனக்கும் கொஞ்சம் கொடுத்தால் என்ன குறைந்தா போய்விடுவீர்கள்? என்றாள்' 'இல்லை நான் மொத்த நீரையும் குடிக்கவில்லை. அதில் கொஞ்சம் நீர் இன்னும் இருக்கிறது. வேண்டுமானால் நீ கொஞ்சம் குடித்துப்பாரேன்' என்று சொல்ல, ஆர்வமுடன் எடுத்துக் குடித்தாள். ஒரு வாய் குடித்ததும்... 'சீ... சீ... என்ன தண்ணீர் இது, என்ன இப்படி நாற்றமடிக்கிறது?' என்று கூறி அந்த நீரை உடனடியாக துப்பி விடுகிறாள்.

அதற்கு அந்த நண்பன் தன் மனைவியைப் பார்த்து சொன்னான்: நீ நீரை தான் சுவைத்தாய். ஆனால் நான் அவன் என் மீது வைத்திருந்த அன்பை சுவைத்தேன். பாலைவனத்தில் தாகமெடுத்து அலைந்து திரிந்த அவனுக்கு ஒரு சாதாரண சுனை நீரே அமிர்தம் போல இருந்திருக்கிறது. அதை தன்னுடைய நண்பனாகிய எனக்கு கொடுக்கவேண்டும் என்று கருதி தனது தோல் பையில் நிரப்பிக் கொண்டுவந்தான். எனவே தோலின் வாடையும் நீரில் ஏறிவிட்டது. நீரின் சுவை முற்றிலும் மாறிவிட்டது. அவன் இருக்கும்போது நீரை உனக்கு கொடுத்திருந்தால் நீ இப்போது செய்ததைப் போலவே அவன் முன்பு செய்திருப்பாய். அவன் மனம் வேதனைப்பட்டிருக்கும். அன்பை விட இவ்வுலகில் சுவையானது வேறு எதுவும் இல்லை' என்றான்.

ஆம் நண்பர்களே, நம்மிலும் அதிகமானவர்கள் எமக்கு கிடைக்கும் பொருட்களின் மதிப்பைத் தான் எடைபோடுகிறோமே தவிர அதனுள் பொதிந்திருக்கும் அன்பை அல்ல. அப்படி செய்வது, உள்ளிருக்கும் முத்தை அறியாமல் சிப்பியை ஒதுக்குவது போன்று. நீங்கள் வாழ்க்கையில் அது போன்று எத்தனை முத்துக்களை தவறவிட்டிருக்கிறீர்கள் தெரியுமா? இனியாவது விழித்துக்கொள்ளுங்கள்!

**யோவான் 15:13 ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை.**



**மீட்பின் ஆண்டு - 2024**

**கர்த்தர் உன்னை உன் சத்துருக்களின் கைக்கு நீக்கலாக்கி மீட்பார்.**

**மீகா 4:10**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உபத்திரவத்திரவத்தில் மறவாத தேவன்

❑ பர்னபா




கிறிஸ்துவுக்குள் அன்பின் நற்செய்தி வாசகர்களுக்கு அனலின் மூலமாக இனிய வாழ்த்துக்கள்!

'கலங்காதே திகையாதே நான் உன் தேவன்; நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை' என்று தேவன் சொன்னபடி வருடத்தின் மீதமுள்ள நாட்களும் தேவன் உங்களைக் கைவிடாமல் விலகாமல் கூட இருந்து நடத்துவாராக – ஆமென்.

**சங்கீதம் 132:1 கர்த்தாவே, தாவீதையும் அவனுடைய சகல உபத்திரவத்தையும் நினைத்தருளும்.**

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, இரட்சிக்கப்பட்டு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு அவருக்கான ஒரு பரிசுத்த வாழ்க்கையை இந்த பூமியிலே நாம் வாழ்ந்தாலும் எமக்கு பல போராட்டங்களும், வேதனைகளும், உபத்திரவங்களும், தனிமைகளும் சம்பவிக்கத்தான் செய்கிறது. இந்த இக்கட்டான நிலமையிலே நாம் நம்மை சுற்றியிருப்பவர்களால் கவனிக்கப் படாதவர்களாக, மதிக்கப்படாதவர்களாக, குற்றவாளிகளாகவும் கூட காணப்படுவோம். ஆனாலும் 'தேவன் நம்முடைய உண்மையான நிலைமையை நன்றாக அறிந்திருக்கிறார்'.

ஒரு முறை தேவனுடைய மனிதனாகிய தாவீது தன்னுடைய சொந்த குமாரன் அப்சலோமினாலே துரத்தப்படுகின்றார். தாவீதைக் கொலை செய்வதற்காக அப்சலோம் இரகசியமாக எல்லாவற்றையும் அரங்கேற்றியதை அறிந்த போது தன்னுடைய உயிரையும், தன்னுடையவர்களின் உயிரையும் தப்புவிக்க எருசலேமை விட்டு வெறுங்காலோடு தாவீது ராஜா கால்நடையாக புறப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி புறப்பட்டுக் கொண்டிருக்கும்வழியிலே; **11சாமுவேல் 16:5-13** சீமேயி என்று சொல்லப்படுகின்ற பெஞ்சமீன் கோத்திரத்தான் தாவீதை பயங்கரமாக தூஷித்துக் கொண்டு வருகின்றான். எப்படியென்றால், நீ செய்த அநியாயத்திற்கு தான் தேவன் உன்னை இப்படி தண்டித்து உன் பிள்ளையின் மூலமாக எல்லாவற்றையும் அனுபவிக்கச் செய்கின்றார். உன் அக்கிரமத்தில்அகப்பட்டாய் தொலைந்து போ, நாசமாகிப்போ, கேடு கெட்ட மனுஷன் (பேலியாளின் மனுஷனே) என்று பொல்லாத வார்த்தைகளால் தாவீதை திட்டி அவன் படுகின்ற இக்கட்டான நிலையை சரியாக புரிந்து கொள்ளாமல் தாவீதை கேவலமாக மோசமாக திட்டுகின்றான்.

ஆனாலும் தாவீதின் உண்மையான நிலைமையை அறிந்த ஆண்டவர் தூஷித்தவன் பயப்படும்படியாக, வெட்கப்படும்படியாக தாவீதை மறுபடியும் ராஜாவாக தேசத்திலே நிறுத்துகின்றார்.

**11சாமுவேல் 16:12 ஒருவேளை கர்த்தர் என் சிறுமையைப் பார்த்து, இந்த நாளில் அவன் நிந்தித்த நிந்தனைகளுக்குப் பதிலாக எனக்கு நன்மையைச் சரிக்கட்டுவார் என்றான்.**

என்று சொன்னது போலவே கர்த்தர் தாவீதுக்கு நன்மையை செய்தார். சீமேயியை சாலொமோன் மூலமாக தேவன் தண்டித்தார். அவன் கொலை செய்யப்பட்டான்.

ஆம் பிரியமானவர்களே, நாம் படுகின்ற உபத்திரவம் மற்றவர் பார்வைக்கு நாம் அழிவதற்கு ஏதுவானது போல காணப்படலாம். இத்தோடு முடிந்தது கதை... யாராவது அப்படியாக எண்ணப்படலாம். ஆனால் தேவன் எம்மை அறிந்திருக்கிறார்.

சிலவேளை கிறிஸ்துவுக்காக நாம் படுகின்ற பிரயாசங்கள், பாடுகள், உபத்திரவங்கள், பிறர் பார்வையில் குற்றமாக, அவமானமாக, தரக்குறைவாக பார்க்கப்படலாம். ஆனாலும் ஒன்றுக்கும் பயப்படாதீர்கள். உங்களையும் உங்கள் உபத்திரவத்தையும் நினைக்கிற ஒருவர் இருக்கிறார்.

யாருக்கும் என்ன செய்தாலும் நன்மையில்லையே, பாராட்டில்லாமல் எல்லாம் பரியாசம் செய்யப்படுகின்றதே என யோசிக்கின்றீர்களா? பயப்படாதீர்கள். 'உங்கள் உபத்திரவத்தை, வேதனையை நினைக்கிறவர் இருக்கிறார்; அவர் பதில் செய்வார்'.

யோபு உபத்திரவத்திற்கூடாக சென்றார். சிநேகிதராலே குற்றவாளியாக பார்க்கப்பட்டார்.

யோசேப்பு உபத்திரவத்தின் குகைக்கூடாக சென்றார். குற்றவாளியென்று தண்டிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்தில் உபத்திரவப்பட்டார்கள், இது தான் தலைமுறை தலைமுறைதோறும் உங்களுடைய வாழ்க்கை என்பது போல எகிப்தியரால் நடத்தப்பட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் பிரியமானவர்களே, கர்த்தருடைய வேளை வந்த போது கர்த்தர் செய்தவைகளை கேள்விப்பட்டீர்களா?

யோபு இரட்டத்தனையாக ஆசீர்வதிக்கப்பட்டார்.

யோசேப்பு எகிப்து தேசத்திற்கு பிரதம மந்திரியாக (ராஜாவுக்கு நிகராக) உயர்த்தப்பட்டார்.

தேவன் நியமித்த நாட்கள் முடிந்த போது இஸ்ரவேலர் அணியணியாக எகிப்தைவிட்டு புறப்பட்டார்கள்.

ஆம் பிரியமானவர்களே எந்த உபத்திரவத்தின் நிலைமையாக இருந்தாலும் நாம் தேவனுக்கு உண்மையாக வாழ்கின்ற போது தேவன் எம்மை நினைப்பார்; மறக்கமாட்டார்.

எனவே கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே, சோர்ந்து போக வேண்டாம், கலங்க வேண்டாம், கர்த்தரை நம்புங்கள்.

**சங்கீதம் 132:17 அங்கே தாவீதுக்காக ஒரு கொம்பை முளைக்கப்பண்ணுவேன்.**

நாம் வேதனைகள், பாடுகள் மத்தியிலும் உண்மையாக வாழ வேண்டுமானால் தேவன் நமக்கானதை செய்து முடிக்க போதுமானவராக இருக்கிறார் - ஆமென்.



## வினா விடை - 122

01. கர்த்தர் ஆறுகளை எப்படி உண்டாக்கினார்?

02. ஜன்னலைத் திறந்து அம்பு எய்த ராஜா யார்?

03. ஆற்றின் தண்ணீர்மேல் நிற்கிற புருஷனைக் கண்டது யார்?

04. முதலாவது தோல் உடைகளை உண்டாக்கினவர் யார்?

05. ஒரு கெபிக்குள் தங்கியிருந்த தீர்க்கதரிசி யார்?

06. 'இந்த வாயாடி' இவர் யார்?

07. மக்பேலா குகையில் அடக்கம் பண்ணப்பட்டவர்கள் யார்? யார்?

08. சாலொமோனின் அரமனை விசாரிப்புக்காரனாயிருந்தவன் யார்?

09. ஒரு தோல் சுருளை சுட்டெரித்தவன் யார்? அதை எழுதினவன் யார்?

10. தேவர்கள் பூமிக்குள்ளிருந்து ஏறி வருகிறதைக் கண்டவன் யார்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யார் பெரியவன்?

❑ ஜசிந்தா அக்கா




ஐந்து விரல்களுக்கிடையே 'யார் பெரியவன்' என்ற வாக்குவாதம் ஏற்பட்டது. ஒவ்வொரு விரலும் தங்கள் தாலந்தை, பெலத்தை, வல்லமைகளைச் சொல்லித் தாங்கள் தான் பெரியவன் என்றனர்.

எழுந்தார் பெருவிரல்; நான் உங்கள் எல்லாரிலும் கட்டையாக இருந்தாலும் எனது உதவி இல்லாமல் பாரமானதைத் தூக்கவோ பென்சில் பிடித்து வரையவோ, பேனா பிடித்து எழுதவோ உங்களால் முடியாது. எல்லாப் பெலனும் என்னிடத்தில் இருக்கிறபடியால் நான் தான் பெரியவள் என்றது.

இதைக் கேட்ட ஆள்காட்டிவிரல் இல்லை, இல்லை உங்கள் எல்லாருக்கும் நான் தான் வழிகாட்டுவேன். நான் வழி காட்டாவிட்டால் தவறிப்போய்விடுவீர்கள். அது மட்டுமா குற்றவாளியைக் கண்டு பிடிப்பதும் நான் தானே. ஆகவே உங்கள் எல்லாரிலும் பெரியவன் நான் தான் என்றது.

ஆ, ஆ... நல்ல கதை பேசுகிறீர்கள். உங்கள் எல்லாரோடும் நிற்கும் பொழுது நான் தான் உயரமானவனாக நிற்கிறேன். நீங்கள் எல்லாரும் எனக்குக் கீழே தான் நிற்கிறீர்கள். ஆகவே நான் தான் பெரியவன் என்றது நடுவிரல்.

அப்பொழுது மோதிரவிரல் 'மோதிரம்' என்னிடத்தில் அல்லவா இருக்கிறது. நான் எவ்வளவு பெரிய ஐஸ்வரியவான். நீங்களோ பெலன் என்னிடத்தில் இருக்கிறது என்கிறீர்கள், வழி காட்டுகிறேன், குற்றவாளியைப் பிடிக்கிறேன் என்கிறீர்கள். உங்கள் எல்லாருக்கும் நான் தானே சாப்பாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போடுகிறேன். சாப்பாடு இல்லாவிட்டால் உங்கள் பெலம் எங்கே? உங்கள் எல்லாருக்கும் நான் தேவை என்பதை நினைத்துக் கொள்ளுங்கள். ஆகவே நான் தான் பெரியவன்.

சின்ன விரல் எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டு அமைதியாய் இருந்தது. மற்றைய விரல்கள் சின்ன விரலைக் கேலி செய்தன. 'என்ன நீ பேசாமல் தலையைக் குனிந்து கொண்டு இருக்கிறாய். சொல்லுகிறதற்கு உன்னிடத்தில் ஏதும் இல்லையோ? நீ சின்னவன் தானே? சொல்லுகிறதற்கு உன்னிடத்தில் என்னதான் இருக்கிறது. சரி... சரி... நீயும் பெரியவன் என்று ஏதாவது சொல்லு' என்று ஏளனம் செய்தார்கள்.

'ஆம் நீங்கள் சொல்லுகிறபடி நான் உங்கள் எல்லாரிலும் சின்னவன். என்னிடத்தில் பெலனே இல்லை, என்னை யாரும் கணக்கெடுப்பதுமில்லை. பெருவிரல் போல நான் பெலசாலியும் இல்லை. ஆள்க்காட்டியைப் போல குற்றவாளியைக் கண்டு பிடிக்கவும் முடியாது. நடு விரல் போல உயரத்திலும் பெரியவன் இல்லை. மோதிர விரல் மாதிரி என்னிடத்தில் ஐஸ்வரியமும் இல்லை. நான் எல்லாரிலும் பெலவீனன், சிறியவன். பெருமை பாராட்டுவதற்கு என்னிடத்தில் எதுவுமே இல்லை. ஆனால் ஒன்று மாத்திரம் எனக்குத் தெரியும் 'ஜெபிக்கும் போது ஆண்டவருக்கு முன்பாக நிற்பது நான் தான். இது மாத்திரம் தான் எனக்குத் தெரியும். அவர் எனக்கு முன்பாக நிற்கிறார். நான் அவருக்கு முன்பாக நிற்கிறேன். அது எனக்குப் போதும்' என்று சின்ன விரல் கூறியது.

சர்வ வல்லவருக்கு முன்பாக எங்களால் நிற்க முடியவில்லையே என்று மற்றைய விரல்கள் கூறின. ஆனால் சின்ன விரல் நிற்கிறது என்று சொல்லி எல்லா விரல்களும் சின்ன விரலைப் பார்த்து **'எங்களில் ஒன்றுமில்லை; நீ தான் பெரியவன்'** என்றன.

பிள்ளைகளே நீங்கள் எந்த விரலைப் போன்றவர்கள்? சிந்தியுங்கள்!

**தன்னைத்தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் - லூக்கா 14:11b**

## இந்த நொடியை அவிழுங்கள் பார்க்கலாம்!

எண்ணப்படாத ஒன்று எண்ணி தொகையிடப்பட்டு அவைகளுக்கு பேரிட்டு அழைக்கப்படுகிறது. எண்ணப்படாததை எண்ணி பேரிட்டு அழைப்பது யார்? எதை?

*இதற்கான விடையையும் எழுதி அனுப்பி பாராட்டைப் பெற்றுக் கொள்ளுங்கள்.*

**அனல் 2024 வைகாசி - ஆனி மாதங்களில் கேட்கப்பட்ட நொடிக்கான விடை:**

மோசே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | ⌖ | | | | 02 |
| | 03 | | | | | ⌖ | ⌖ | |
| | | ⌖ | ⌖ | | | | | 04 |
| | 05 | | | | ⌖ | ⌖ | ⌖ | |
| ⌖ | | ⌖ | ⌖ | | | | 06 | |
| | 07 | | | ⌖ | ⌖ | | 08 | |
| | | 09 | | | | ⌖ | | |
| | ⌖ | | | | | 10 | | |
| 11 | | | | | ⌖ | ⌖ | 12 | ⌖ |

## குறுக்கெழுத்துப் போட்டி 120

**இடமிருந்து வலமாக**

01. 'இனி என்னில் பெலனில்லை என்னில் மூச்சுமில்லை' எனக்கூறியவன்
03. அம்னோனின் அம்மா
05. இவன் எலியாபின் குமாரன், கோராகின் கூட்டாளி, கர்த்தருக்கு விரோதமாக போராட்டம் பண்ணியவன்
07. ஏபேரின் மனைவி
09. இவன் சூர் மலையின் மேல் ஏறுகிற வழியிலே வெட்டப்பட்டான்
11. இவன் ஒரு தூணை நிறுத்தி அத்தூணுக்கு தன் பெயரை வைத்தான்

**வலமிருந்து இடமாக**

02. சீமேயி இந்த ஆற்றைக் கடக்கும் நாளில் சாவான் எனக்கூறப்பட்டது
04. இவன் 300 பேர்களின் மேல் தன் ஈட்டியை ஓங்கி அவர்களை ஒருமிக்க கொன்று போட்டான்
06. இவன் பெயர் 'யெதிதியா' என நாத்தான் பெயரிட்டான்
08. பெசலெயேலின் அப்பா
10. யாக்கோபு தேவனுடைய சேனையைக் கண்ட ஸ்தலத்திற்கு இவ்வாறு பெயரிட்டான்

**மேலிருந்து கீழாக**

01. தன் தேகத்தினுள் தன் ஆவியிலே சஞ்சலப்பட்டவன்
02. முற்காலத்தில் தெபீருக்கு இவ்வாறு பேர்
03. அகசியா மரித்த பின் தேசத்தின் மேல் ராஜ்யபாரம் பண்ணியவள்

**கீழிருந்து மேலாக**

11. மோவாபுக்கும் எமோரியருக்கும் நடுவே இருக்கிற மோவாபின் எல்லை
12. கர்த்தர் ஊசாவை அடித்த ஸ்தலத்திற்கு தாவீது இவ்வாறு பெயரிட்டான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




❑ போதகர் வை.தேவதாஸ்




**பி**ரியமான சகோதர சகோதரிகளே உங்கள் அனைவருக்கும் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் நல் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன். எப்படியிருக்கின்றீர்கள்? நீங்கள் எல்லா வகையிலும் வாழ்ந்திருக்க உங்களை ஆசீர்வதிக்கின்றேன்.

**111யோவான் 1:2 பிரியமானவனே, உன் ஆத்துமா வாழ்கிறதுபோல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக் கும்படி வேண்டுகிறேன்.**

நாம் எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருப்பதே தேவ சித்தமாக உள்ளது. குறிப்பாக உங்கள் உடல் நலத்திற்காக ஜெபிக்கின்றேன். கிருபை உங்களோடிருப் பதாக.

தொடர்ந்தும் வாலிபர் வளாக வேத பாடத்தில் தற்பொழுது அம்னோனைக் குறித்து கற்று வருகின்றோம். அந்த வகையில் வாலிபப்பருவத்தில் இருந்த அம்னோன் தனக்குள் எழும்பிய ஆசை சரியா? பிழையா? எப்பேர்ப்பட்ட முடிவை எடுக்கலாம் என்ற குழப்பத்தில் அவன் இருந்த தனை நாங்கள் பார்த்தோம். அம்னோன் சரியான முடிவை எடுப்பதற்கு அவனுக்குப் பல வழிகள் இருந்தது. குறிப்பாக அவன் கர்த்தரைத் தேடி அவரது வழிநடத்துதலுக்கு காத்திருக்கலாம். அப்படியில்லாதிருந்தால் தன் பெற்றோரையோ அல்லது ஆவிக்குரிய தலைவர் களையோ நாடியிருக்க முடியும். ஆனால் அவன் அவைகளில் ஒன்றைக்கூட செய்யாமல் தனது உணர்வு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை பிழையான வழியில் கொண்டு செல்லக்கூடிய ஒருவனின் புத்திமதியைக் கேட்டான்.

**11சாமுவேல் 13:3 அம்னோனுக்கு தாவீதுடைய தமையன் சிமியாவின் குமாரனாகிய யோனதாப் என்னும் பேருள்ள ஒரு சிநேகிதன் இருந்தான்; அந்த யோனதாப் மகா தந்திரவாதி.**

அவனுக்கு யோனதாப் எனும் சிநேகிதன் இருந்தான். அவன் எப்படிப்பட்டவன் என்றால் 'மகா தந்திரவாதி' என சொல்லப்படும் அளவிற்கு தந்திர புத்தியுள்ளவனாக இருந்திருக்கிறான்.

தந்திரபுத்தி என்பது அது பிசாசிற்கு உரிய செயலாகும். பல தந்திரங்கள் நிறைந்தவனாக பிசாசு காணப்படுகின்றான்.

**11கொரிந்தியர் 11:3 ஆகிலும், சர்ப்பமானது தன்னுடைய தந்திரத்தினாலே ஏவாளை வஞ்சித்ததுபோல, உங்கள் மனதும் கிறிஸ்துவைப் பற்றிய உண்மை யினின்று விலகும்படி கெடுக்கப்படுமோவென்று பயந்திருக்கிறேன்.**

ஆதி மனிதர்களாகிய ஆதாம் ஏவாளை வீழ்த்துவதற்கு சாத்தான் தனது தந்திர குணத்தையே பயன்படுத்தினான். அம்னோன் வாலிபத்தின் உணர்வுகளால் சிக்கித்தவித்துக் கொண்டிருக்கும் பொழுது தந்திரபுத்திக் காரனாகிய யோனதாப் வந்தது போல் பிரியமான வாலிபர்களே நீங்களும் உணர்வு ரீதியாக போராடும் போது சாத்தான் தந்திரமாக உங்களை மேற்கொள்ள முயற்சி எடுப்பான். மிக அவதானமாக இருங்கள்.

**எபேசியர் 6:11 நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக் கொள்ளுங்கள்.**

ஆகவே தேவ பிள்ளைகளே! பிசாசின் தந்திரங்களுக்கு எதிர்த்து நில்லுங்கள். ஆண்டவர் உங்களுக்கு துணை செய்வார். பயப்படாதிருங்கள். **அவனது அரணங்களை நிர்மூலமாக்கும் வல்லமையை அவர் உங்களுக்கு தந்திருக்கிறார்.**

**11கொரிந்தியர் 2:11 சாத்தானாலே நாம் மோசம்போகாதபடிக்கு, அப்படிச் செய்தேன்; அவனுடைய தந்திரங்கள் நமக்குத் தெரியாதவைகள் அல்லவே.**

பிசாசினுடைய தந்திர புத்தியை நாம் தெரிந்திருக்க வேண்டும். அவன் மிகவும் தந்திரமாகச் செயல்பட்டு கர்த்தருடைய பிள்ளைகள் தவறு செய்யும் பொழுது தொடர்ந்து அதே பாவத்திற்குள்ளாக அவர்களை வழிநடத்தி மனச்சாட்சியில் அவர்களை உணர்வற்றவர்களாக மாற்றி நரகத்திற்கு செல்வதற்கு வழி வகுத்துவிடுவான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தோடு சக கிறிஸ்தவர்களும் பாவத்தைக் குறித்து கண்டிக்காமல் இருப்பதனால் அதனை வைத்தே எமது சுத்த மனச்சாட்சியை கறைபடுத்துவான். பாவத்தில் விழுந்த விசுவாசியை மனரீதியில் வாதித்து மீண்டும் மீண்டும் அப் பாவத்தில் விழ வைப்பான்.

எனவே தேவ பிள்ளைகளே அவனுடைய தந்திரங்களை அறிந்து அதற்கு எதிர்த்து நில்லுங்கள். அம்னோனை பார்த்து தந்திரவாதியான யோனதாப் கேட்கிறான்:

**11சாமுவேல் 13:4 அவன் இவனைப் பார்த்து: ராஜகுமாரனாகிய நீ, நாளுக்குநாள் எதினாலே இப்படி மெலிந்து போகிறாய், எனக்குச் சொல்லமாட்டாயா என்றான். அதற்கு அம்னோன்: என் சகோதரன் அப்சலோமின் சகோதரியாகிய தாமாரின்மேல் நான் ஆசை வைத்திருக்கிறேன் என்றான்.**

அம்னோன் தாமாரின் மேல் உள்ள தாகத்தினால் ஏக்க வியாதி கொண்டு மெலிந்து போகத் தொடங்கினான். நாளுக்கு நாள் அம்னோனின் செயற்பாடுகள் வீழ்ச்சியடைந்து கொண்டே போனது. இதனைக் காரணமாக வைத்துக் கொண்டு யோனதாப் அவனது வாழ்வில் தலையிடப்பார்க்கின்றான். அதற்கு அம்னோனும் இடங்கொடுப்பதனைப் பார்க்கின்றோம். அவன் கேட்ட கேள்விக்கு அம்னோன் கட்டுப்பட்டு தன் இருதயத்தில் உள்ள எல்லாவற்றையும் அவனுக்குச் சொல்லுகின்றான்.

குறிப்பாக 'ஆசை' வைத்திருக்கிறேன் என்று சொல்லி தன்னுடைய ஆசையைக் குறித்து அவனிடம் சொல்லுகின்றான். யார் மேல் ஆசை வைத்திருக்கிறான் என்று பார்த்தால்; 'சொந்த சகோதரியின்' மீது ஆசை வைத்திருக்கிறான்.

**தேவ பிள்ளைகளே இன்றும் உங்களுக்கு இருக்கும் ஆசைகளைக் குறித்து சற்று சீர்தூக்கிப் பாருங்கள். உங்கள் வாழ்வின் முன்னேற்றத்தை நாளுக்கு நாள் சிதைக்கும் ஆசை என்னவென்று சற்று சீர்தூக்கிப்பார்த் தால் மிகவும் நலமாக இருக்கும்.**

அம்னோன் தன் சகோதரியின் மீது ஆசை வைத்திருந்த போதும் இன்னும் அதனை அனுபவிக்காதவனாகவே இருந்தான். எனவே அவன் 'தெய்வீக உதவியோடு அந்த ஆசையை மேற்கொண்டிருக்க முடியும்'. அத்தோடு 'தேவன் வைத்துள்ள அனேக நன்மையான வழிகள் மூலமாக அதனை அவன் மேற்கொண்டு ஜெயம் பெற்றிருக்கலாம்'. ஆனால் அவன் தந்திரவாதியான தன் சிநேகிதனிடம் தனது அந்தரங்க விடயங்களை பகிர்ந்து கொள்ளத் தொடங்கினான். விளைவு அவன் தந்திரமான முறையில் அம்னோன் பாவம் செய்வதற்கு வழிகாட்டியாக இருந்தான். அம்னோன் தனது ஆசையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோனதாப்பிடம் சொன்னபோது யோனதாப் சொன்ன ஆலோசனையைப் பாருங்கள். அப்பொழுது அவனது தந்திர குணம் உங்களுக்கு புலப்படும்.

**11சாமுவேல் 13:5 அப்பொழுது யோனதாப் அவனைப் பார்த்து: நீ வியாதிக்காரனைப்போல உன் படுக்கையின்மேல் படுத்துக்கொள்; உன்னைப் பார்க்கிறதற்கு உன் தகப்பனார் வரும் போது, நீ, என் சகோதரியாகிய தாமார் வந்து, எனக்குப் போஜனம் கொடுத்து, அவள் கையினாலே சாப்பிடும்படிக்கு நான் பார்க்க, என் கண்களுக்கு முன்பாகச் சமைக்கும்படி தயவுசெய்யவேண்டும் என்று சொல் என்றான்.**


அம்னோன் தொடர்ந்து பாவத்திற்குள் விழும்படி யோனதாப் வழிமுறைகளை வகுத்துக் கொடுக்கிறான். அம்னோனை நடிக்கும்படி யோனதாப் கூறுகின்றான். எவ்வளவு வஞ்சகமான முறையில் நல்லதை தான் சொல்கிறேன் என்பதை நம்ப வைத்து விசத்தைக் குடிக்கப்பண்ணுகிறான். ஒரு ராஜகுமாரன் மதிகெட்ட காரியத்தை செய்து அழியும்படியான ஓர் துர் ஆலோசனையை அவனுக்குக் கொடுத்தான்.

**11சாமுவேல் 13:6 அப்படியே அம்னோன் வியாதிக்காரனைப்போல் படுத்துக்கொண்டு,**

மகுடியின் இசைக்கு பாம்பு ஆடுவது போல யோனதாபின் துர்ஆலோசனைக்கு ஏற்றபடி அம்னோன் செயற்படத்தொடங்கினான்.

**11சாமுவேல் 13:14 அவன் அவள் சொல்லைக் கேட்கமாட்டேன் என்று அவளைப் பலவந்தமாய்ப் பிடித்து, அவளோடே சயனித்து, அவளைக் கற்பழித்தான்.**

சகோதரி முறையான ஓர் இளம்பெண்ணை கற்பழிக்கும் அளவிற்கு அம்னோன் சென்றான். சகோதர சகோதரிகளே நீங்கள் எடுக்கும் தீர்மானங்களைக் குறித்து மிகவும் ஜாக்கிரதையாக இருங்கள். அத்தோடு நீங்கள் யாரிடம் உங்கள் அந்தரங்க விடயங்களை பகிர்ந்து கொள்கிறீர்கள் என்பதைக் குறித்தும் மிக அவதானமாக இருங்கள். கிருபை உங்களோடிருப்பதாக.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




❒ திருமதி. J.பிலிப்




**தே**வனுடைய கிருபையினால் 2024 ஆம் ஆண்டின் ஆறு மாதங்களை கடக்க தேவன் எமக்கு கிருபை கொடுத்திருக்கிறார். அவருக்கே எல்லா துதி, கனம், மகிமை உண்டாகட்டும்.

பெண்கள் அதிகமாக புகழ்ச்சியை விரும்புவது உண்டு. எதை செய்தாலும் தங்களை புகழவேண்டும் என்று எதிர்பார்ப்பவர்கள் அனேகர் உண்டு. ஆனால் வீண் புகழ்ச்சியை நாம் ஒரு போதும் விரும்பக்கூடாது என்று வேதம் நமக்கு எச்சரிக்கிறது.

**கலாத்தியர் 5:26 வீண் புகழ்ச்சியை விரும்பாமலும், ஒருவரையொருவர் கோபமூட்டாமலும், ஒருவர்மேல் ஒருவர் பொறாமை கொள்ளாமலும் இருக்கக்கடவோம்.**

வீண் புகழ்ச்சி எங்கே ஆரம்பித்தது?

**ஆதியாகமம் 3:5 நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப்போல் இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார் என்றது.**

ஏவாளைப் பார்த்து சர்ப்பம்; நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும் நன்மை, தீமை அறிந்து தேவர்களைப் போல இருப்பீர்கள் என்றது. ஏவாளுக்கு ஒரு ஆசை உண்டாயிற்று. தாங்களும் தேவர்களைப் போல இருக்க வேண்டும், தாங்களும் தேவர்கள் என்று அழைக்கப்பட வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டவுடன், தேவன் விலக்கின கனியை பறித்து புசித்து தன் புருஷனுக்கும் கொடுத்தாள். வீண் புகழ்ச்சியை விரும்பினாள் - ஏதேன் தோட்டத்தைவிட்டு துரத்தப்பட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்த்தாள் என்னும் ஸ்திரீ இயேசுவை தன் வீட்டிலே ஏற்றுக்கொண்டாள். அவளுக்கு மரியாள் என்னப்பட்ட ஒரு சகோதரி இருந்தாள். இயேசு அவர்கள் வீட்டிற்குள் வந்த போது மரியாள் இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து அவருடைய வசனத்தைக் கேட்டுக்கொண்டிருந் தாள். மார்த்தாளோ பற்பல வேலைகளைச் செய்வதில் மிகவும் வருத்தம் அடைந்து இயேசுவினிடத்தில் வந்து தான் தனியே வேலை செய்யும்படி என் சகோதரி என்னைவிட்டு வந்திருக்கிறதைக் குறித்து உமக்கு கவலையில் லையா? எனக்கு உதவி செய்யும்படி அவளுக்கு சொல்லும் என்றாள்.

மார்த்தாள் தான் தனியே வேலை செய்வதை அறிந்த இயேசு தன்னை புகழ்ந்து பேசுவார் என்று எண்ணியிருக்கலாம். வீண் புகழ்ச்சியை எதிர்பார்த்து இருந்திருப்பாள். ஆனால் இயேசுவிடம் இருந்து வந்த பதில் என்ன? **'தேவையானது ஒன்றே, மரியாள் தன்னைவிட்டு எடுபடாத நல்ல பங்கைத் தெரிந்து கொண்டாள்'** என்றார். வேலை செய்தவளா; அல்லது தேவனுடைய வார்த்தையை பாதத்தருகே அமர்ந்து கேட்டுக்கொண்டிருந்தவளா புகழப்பட்டாள்?.

சகோதரியே மனிதர்களால் நீ புகழப் படவேண்டும் என்று வீண் புகழ்ச்சியை விரும்பாமல் கர்த்தருக்குப் பயந்து அவருடைய பாதத்தில் நீ காத்திருந்து அவர் சொல்கிறபடி நீ செய்யும்போது தேவனால் புகழப்படுவாய். மார்த்தாள் வீண் புகழ்ச்சியை விரும்பியதினால் சகோதரிமேல் ஒரு கோபம், பொறாமை ஏற்பட்டதால் இயேசுவிடம் போய் கேள்வி கேட்டாள்.

சகோதரியே நீயும் வீண் புகழ்ச்சியை விரும்பினால் கோபம், பொறாமை மற்றவர்கள் மேல் உனக்கும் ஏற்படாலம்.

**பிலிப்பியர் 2:3 ஒன்றையும் வாதினாலாவது, வீண் பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள்.**

சகோதரியே மற்றவர்களை மேன்மையாக எண்ணுவோம். அப்போது தேவ ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்வோம்.

**சங்கீதம் 111:10 அவர் புகழ்ச்சி என்றைக்கும் நிற்கும்.**









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# எமில் ரிச்சர்டு

\-

## தரிசனம் செயல்பட வேண்டும்



சிறுவிதை ஆலமரமாகும். அதிலிருந்து வரும் விழுதுகளும், எண்ணற்றவையாகத் தொடரும். ஆம்! சிறு தரிசனங்களும் அப்படியே! அவை விரிவடைந்துக் கொண்டே செல்லும். ஆண்டவர் தரும் தரிசனங்கள் நிச்சயமாகவே பெருகி, பலருக்குப் பயனைத் தரும்.

எமில் ரிச்சர்டு தரிசனத்தின் சொந்தக்காரரானார். இந்தியாவின் ஆதரவற்ற ஏழைக் குழந்தைகளுக்காக அவர் உள்ளம் ஏங்கியது. உடனேத் தன்னை அர்ப்பணித்தார். 1957ஆம் ஆண்டு, இந்தியாவின் ஏழைக் குழந்தைகளுக்காக ஒரு நிறுவனத்தை ஜெர்மனி தேசத்தில் ஆரம்பித்து இந்தியாவில் கால் பதித்தார்.

இன்று இந்தியாவில் 70க்கும் மேற்பட்ட இடங்களிலும், அயல்நாடுகளிலும் தன் கிளைகளைப் பரப்பி, பல்லாயிரக்கணக்கான குழந்தைகளை, வாழ்வின் உயர்ந்த நிலைக்கு உயரச் செய்து, ஆயிரமாயிரம் மாணவ மாணவிகளின் வாழ்வில் ஒளியேற்றி, சுடர்விட்டுப் பிரகாசிக்கும் 'கிறிஸ்டியன் மிஷன் சர்வீஸ்' (CMS) என்பதே அந்த நிறுவனம்.

உண்ண உணவிற்குக் குறைவில்லை; உடுக்க உடைக்குப் பஞ்சமில்லை; தங்கும் இடத்திற்கோ அளவில்லை; உலகியல் அறிவுக்குப் பள்ளிகள்; உன்னதரைப் பற்றி அறிவதற்கு அனுதினமும் காலை மாலை தியானங்கள்;


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசுவாசத்தில் நிலைக்க ஜெப ஜீவியங்கள். மொத்தத்தில் C.M.S ஒரு 'குட்டிப் பரலோகம்' என்றே சொல்லலாம்.

அர்ப்பணித்த அடியார்களால் ஆச்சரியமான தலைவர்கள் உருவாக்கப்பட்டுள்ளனர். உருவாகிக் கொண்டும் இருக்கின்றனர். எமில் ரிச்சர்டு இந்திய ஏழைகளின் கனவை நனவாக்கினார். பாதையறியா மக்களுக்குப் பாதையைக் காட்டி, அவைகளில் நடக்கும் பக்குவத்தையும் கொடுத்தார். பரலோக வாழ்வை இகத்தினில் கொடுக்க இதயத்தைத் திறந்தார். இவரால் இளம் இதயங்கள் இன்பமுடன் தங்கள் வாழ்வைத் தொடர்கின்றனர். எமில் ரிச்சர்டு என்ற விதை ஆலமரமானது.

**அன்பரே! பிறர் வாழ்வை உயர்த்த உங்களின் சிறு முயற்சி என்ன?**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு: தீர்க்கதரிசனமில்லாத இடத்தில் ஜனங்கள் சீர்கெட்டுப்போவார்கள் – சாலமொன்**

**நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" ஜனவரி 6**



# ராபர்ட் டி நொபிலி
# 1577 - 1656

## பிற சமயத்தவர்களும் இறைமக்களே

மதத்தால் மனிதன் இன்று பிரிவு படுகின்றான். மேலும் பிரிக்கப்படுகின்றான். இதனால் சண்டைகளும் சச்சரவுகளும் மலிந்துவிட்டன, குவிந்துவிட்டன.

மனிதன் யார்? மதம் என்பது என்ன? என்ற கேள்விகளைக் கேட்டுக்கொண்டே வாழ்வைக் கடத்தாமல் மதபாகுபாடு இன்றி மனிதர்களை நேசிப்பவரே இயேசு என்பதை ஒவ்வொரு மனங்களும் புரிந்து கொள்ள வேண்டும்.

1605ஆம் ஆண்டு இந்தியாவில் காலடி எடுத்து வைத்தார் ராபர்ட் டி நொபிலி என்ற தத்துவப்போதகர். சுவிசேஷம் அறிவிக்க வேண்டும் என்ற வாஞ்சை அவர் உள்ளத்தில் அக்கினிச் சுவாலைகளாய் பற்றி எரிந்தது.

1606ஆம் ஆண்டு மதுரை வந்த இவர், உயர் ஜாதி இந்துக்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கும் வாஞ்சையில் தன்னையும் அவர்களைப் போல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றினார். உணவுப் பழக்கவழக்கங்களும், உடைகளும் மாறின. அவர்கள் முறைகளில் சுவிசேஷத்தை எடுத்துக்கூறினார். எதிர்ப்புகள் பல இடங்களிலிருந்தும் கிளம்பின. ஆனால் எவைகளையும் பொருட்படுத்தாமல் தன் பணியைத் தொடர்ந்தார்.

கிறிஸ்துவின் அன்பால் தொடப்பட்டவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தார். நாளுக்கு நாள் அநேக உயர் ஜாதி இந்துக்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டனர். மதுரை மாநகருக்கு இரட்சகர் இயேசுவை இலவசமாகக் கொடுத்தார் ராபர்ட் டி நொபிலி.

இத்தாலி, போர்ச்சுக்கல், லத்தீன், தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம் போன்ற மொழிகளில் புலமைப் பெற்றிருந்த இவர், தாம் சேவை புரிந்த ஐம்பது ஆண்டுகளில் பல புத்தகங்கள் எழுதினார்.

பிற சமயத்து நண்பராகத் தன்னை மாற்றிய இராபர்ட் டி நொபிலி 1656ஆம் ஆண்டு ஜனவரி இதே நாள் தமது 80ஆம் வயதில் வாழ்வை முடித்தார்.

**அன்பரே! பிற இன மக்களுக்காக உங்களின் சுவிசேஷப்பணி என்ன?**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு:** ஏ வழிப்போக்கனே! இங்கே சிறிது நில்! இந்தக் குறுகிய கல்லறையில் ஒரு வலிமையான ஞாயிறு மறைந்து உறங்குகிறது. மேற்கேத் தோன்றிய இந்த ஞாயிறு கிழக்கே ஏன் மறைய வேண்டும்? — ராபர்ட் டி நொபிலி

**நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" ஜனவரி 16**


---

## வினாவிடை 121
### சரியான பதில்கள்

01. உத்தமமார்க்கத்தார் - நீதிமொழிகள் 11:20
02. தமக்குப் பயந்து, தமது கிருபைக்குக் காத்திருக்கிறவர்கள் மேல் - சங்கீதம் 147:11
03. மோசே - உபாகமம் 1:11
04. மேசா - 11இராஜாக்கள் 3:4
05. எரேமியா - புலம்பல் 3:8
06. கிறிஸ்துவுக்கு ஊழியஞ்செய்கிறவன் - ரோமர் 14:18
07. எரேமியா 31:10
08. சாலொமோன் ராஜா - 1இராஜாக்கள் 8:14
09. துன்மார்க்கன் - சங்கீதம் 109:17
10. நீதியுள்ள உதடுகள் - நீதிமொழிகள் 16:13



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




போதகர் வேதநாயகம் மகாராஜா



# பெருமையும்; பெருமை கொண்டுவரும் விளைவுகளும்!

**“பெருமைக்குணம் யாரிடமெல்லாம் காணப்படுகிறதோ அவர்களை எல்லாம் சத்துரு நேரடியாக ஆட்கொண்டு நடத்துகிறான்.”** நாம் ஒன்றை தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும். கர்த்தர் சீக்கிரமாக வரப்போகிறார் என்று வேதத்தில் சொல்லப் பட்டிருக்கிறது. அதற்கு நாங்கள் ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறோம். ஆனால் ஆண்டவர் எதிர்பார்க்கிற நிலையில், பெரும்பாலானவர்கள் இல்லை. பெருமைக்குரிய சில காரியங்களையும், அது ஏற்படுத்திக் கொண்டிருக்கிற விளைவுகளையும் குறித்து ஆராய்ந்து பார்ப்போம்.

மனிதனுக்குள் முதலாவது பாவம் உண்டானது ஏதேன் தோட்டத்தில். ஆனால் லூசிபர் எங்கேயிருந்து பாவம் செய்தான் என்றால் வானமண்டலங்களில். ஏனெனில் பரலோகத்தில் பாவம் உருவாக முடியாது, அங்கே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவம் போகவும் முடியாது என்பதை தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். தேவனுடைய சிங்காசனம்அதுஉயர்ந்தது. தேவனுடைய ஆராதனையை நடத்தி வந்த லூசிபருக்குள் தேவனுக்கு மேலாக தனது சிங்காசனத்தை உயர்த்துவேன் என்ற எண்ணம் வந்தவுடனே தேவன் அந்த தூதனையும், அவனோடு சேர்ந்த கூட்டத்தையும் அப்படியே தள்ளிவிட்டார். **பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார். தாழ்மையுள்ள வர்களுக்கு கிருபை அளிக்கிறார்.** லூசிபர் தனக்கு கொடுக்கப்பட்ட வேலையை செய்யாமல், தான் தேவனால் எதற்காக உருவாக்கப்பட்டேன் என்பதை மறந்து, பெருமை கொண்டு, திமிர் கொண்டு, சிந்தையில் மேட்டிமை வந்தபோது தேவனைப் போல வருவேன், தேவனுக்கு மேலாக சிங்காசனம் அமைப்பேன் என்ற எண்ணம் வந்த போது தேவன் அவனைத் தள்ளிவிட்டார்.

**ஏசாயா 14:13-15 (13.) நான் வானத்துக்கு ஏறுவேன், தேவனுடைய நட்சத்திரங்களுக்கு மேலாக என் சிங்காசனத்தை உயர்த்துவேன்: வட புறங்களிலுள்ள ஆராதனைக் கூட்டத் தின் பர்வதத்திலே வீற்றிருப்பேன் என்றும், 14. நான் மேகங்களுக்கு மேலாக உன்னதங்களில் ஏறுவேன்: உன்னதமான வருக்கு ஒப்பாவேன் என்றும் நீ உன் இருதயத்தில் சொன்னாயே. 15. ஆனாலும் நீ அகாதமான பாதாளத்திலே தள்ளுண்டு போனாய்.** பெருமை என்பது எல்லா மக்களையும் தாக்கும். சிலரது பெருமை கண்களில் இருக்கும், சிலருக்கு பேச்சில் இருக்கும். சிலர் தாங்கள் பிறந்த இடத்தை வைத்து பெருமை கொள் வார்கள். நீங்கள் பிறந்தது உங்கள் திட்டமா என்று கேட்டால், இல்லை, ஆனால் என்னுடைய குலம், கோத்திரம் என்ன தெரியுமா? என்று பெருமை கொள்வார்கள். சிலரின் தாழ்மைக்குள் பெருமை ஒளிந்திருக்கும். எனவே இப்படியான சுபாவங்கள் எங்களிடம் இருக்குமென்றால் நாங்கள் ஆண்ட வரின் பக்கம் திரும்ப வேண்டும்.

எங்களுடைய வீட்டில் பலகை ஒன்று இருந்தது. அதை எடுக்க வேண்டிய சந்தர்ப்பம் வந்தபோது, அதை எடுத்துப் பார்த்தால், கறையான்கள் அதை அப்படியே அரித்துவிட்டது. மேலே பார்த்தால் நன்றாக இருந்தது, ஆனால் அதை திருப்பி பார்த்த போது முழுவதும் பழுதாய் போய்விட்டது. இனி பாவிக்க முடியாத நிலை. நாங்கள் பெருமையோடு இருக்கிற போது எங்களுடைய வாழ்க்கை அரிக்கப்பட்டு, பாதிப்பு உண்டுபண்ணி, பெரிய பின் விளைவுகளை அது கொண்டுவரும். நாங்கள் இன்றோடு அதற்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும். பெருமை யினால் வருகிற ஒரு சில விளைவுகள்.

## 1.பெருமை தேவசித்தத்திற்கு விரோதமாக செயலாற்றப்பண்ணும்.

**ஏசாயா 14:14 நான் மேகங் களுக்கு மேலாக உன்னதங்களில் ஏறுவேன்: உன்னதமானவருக்கு ஒப்பா வேன் என்றும் நீ உன் இருதயத்தில் சொன்னாயே.** லூசிபரின் இந்த செயல் தேவனுடைய சித்தத்திற்கு விரோத


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானது. எந்த நேரத்தில் எல்லாம் தேவனுடைய சித்தத்திற்கு விரோதமாக செயல்படுகிறோமோ, அந்த நேரத்தில் நாங்கள் பெருமையுள்ளவர்கள். எங்களு டைய வாழ்வு எப்படி வாழப்பட வேண்டும் என்று முன்குறித்திருக்கிறாரோ அதை ஏற்றுக்கொண்டு வாழ்வது தான் பெருமை யில்லாத வாழ்வு. உங்களை எப்படி வைத்திருக்க ஆண்டவர் சித்தம் கொண்டாரோ அதுதான் உங்களுடைய உண்மையான நிலை. நாங்கள் தலை கீழாக நின்று, தேவசித்தத்தை விட்டு மாறினால் நாங்கள் பெருமையுள்ள வர்கள்.

பெருமை தேவனுடைய சித்தத் திற்கு விரோதமாக எங்களை செயலாற் றப்பண்ணும். உங்களுடைய வாழ்வில் கர்த்தர் எதை அனுமதிக்கிறாரோ அதை சந்தோஷமாக, ஆண்டவரே உம்முடைய சித்தம் என்று ஏற்றுக் கொள்ளுங்கள். எங்களுடைய வாழ்க்கையில் ஆண்ட வரின் சித்தம் பெருமையால் குழப்பப் பட்டிருக்கிறது. பெருமையால் எங்களு டைய வாழ்க்கையின் உண்மைத் தோற்றங்கள் மறைக்கப்பட்டிருக்கிறது, உறவுகள் உதாசீனம் செய்யப்பட்டிருக் கிறது. உள்ளான வாழ்வு ஒன்று, வெளியான வாழ்வு வேறொன்றாக காணப்படுகிறது. பெருமை எங்களின் உண்மை நிலையை மற்றவர்கள் பார்ப்பதற்கு வெட்கப்படுகிறது. பெருமை எங்களுடைய சுயதோற்றம் வெளியிலே தெரியாமல் இருப்பதற்கு ஒரு மூடு திரையை கொண்டு வருகிறது. மாறாக நாம் யார், எதற்காக உருவாக்கப்பட்டி ருக்கிறோம், தேவன் என்னை எப்படி வைத்திருக்க சித்தம் கொண்டிருக் கிறாரோ அதை ஏற்றுக்கொண்டு அதற் காக உங்களை அர்ப்பணித்திருக்க வேண்டும். தேவன் உங்களுக்கு தர வேண்டிய ஆசீர்வாதத்தை எந்த அளவில், தரத்தில் தந்திருக்கிறாரோ, அதுதான் தேவனுடைய சித்தம். அதற்கு மேலாக ஆசீர்வதிக்கப்பட வேண்டும் என்று சித்தம் கொண்டால் நாங்கள் தேவனுடைய சித்தத்திற்கு விரோதமாக செயலாற்றுகிறோம்.

பிசாசு பெருமையினால் தேவனு டைய சித்தத்தை, திட்டத்தை மீறுவேன் என்ற எண்ணம் கொண்டான். **தேவன் போட்ட எல்லைக் கோட்டை மீறுவது பெருமை.** சில பெற்றோர் தங்களுடைய பிள்ளைகளுக்கு சொல்லுவார்கள், அந்த வீட்டிற்கு போக வேண்டாம், அடிக்கடி வீதியில் போகக்கூடாது, அடிக்கடி சைக்கிளில் சுற்றக்கூடாது என்றால் அது அவர்கள் உங்களுக்கு போடுகிற எல்லை. ஆண்டவருடைய சித்தத்தை, அளவை மீறி, முரட்டாட்டம் பண்ணுவீர் களானால் நீங்கள் பெருமைக்காரர்கள்.

ஒரு தாய்ப்பசு கன்றுக்குட்டியை பார்த்து, நான் போட்ட எல்லைக்கு அந்தப்பக்கம் போகக்கூடாது என்று சொன்னது. அதற்கு கன்றுக்குட்டி ஏன் அம்மா அப்படி சொல்லுகிறீர்கள் என்று கேட்ட போது, அதற்கு தாய்ப்பசு நீ அதை தாண்டிப்போனால் உன்னுடைய ஜீவன் போகும் என்று சொன்னது. அதற்கு கன்றுக்குட்டி என்னை மாதிரி யார் துள்ளி ஓடுவார்கள், அம்மா நான் எப்படி ஓடுகிறேன் பாருங்கள் என்று சொன்னது. அதற்கு தாய்ப்பசு அது சரி, ஆனால் இந்த எல்லைக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தப்பக்கம் போனால் உன் ஜீவன் போகும், எனவே போகக்கூடாது என்று சொன்னது. ஆனால் கன்றுக்குட்டி அதைக் கேட்டு அப்படியே விட்டு விட்டது. ஒரு நாள் தாய்ப்பசு மேய்ந்து கொண்டிருந்த போது கன்றுக்குட்டி மெல்ல மெல்ல துள்ளி எல்லைக்கு அந்தப்பக்கம் போய்விட்டது. கொஞ்ச நேரம் கழித்து, "அம்மே" என்ற சத்தம் கேட்ட போது, தாய்ப்பசு கன்றுக் குட்டியை பார்த்த போது, தான் குறித்து வைத்த எல்லைக் கோட்டிற்குள் அதைக் காணவில்லை. சத்தம் கேட்ட திசையை நோக்கிச் சென்று பார்த்த போது ஒரு ஓநாய் அதை வைத்து சாப்பிட்டுக் கொண்டிருந்தது. இந்த கன்றுக்குட்டி தனக்கு போட்டிருந்த எல்லைக் கோட்டை பெருமையினால் மீறியதால் இறுதியில் அதன் உயிரே போய்விட்டது.

தேவன் எங்களுக்கு போட்ட அளவுக்கு விரோதமாக காலடி எடுத்து வைத்தால் எங்களுடைய வாழ்க்கையில் பெரிய பாதிப்பு வரும். தேவசித்தத்திற்கு விரோதமாக, பெருமையினால் செய லாற்றினால் எங்களுக்கு பெரிய இழப்பு வரும். இதை நாம் கவனித்துக் கொள்ள வேண்டும்.

## 2. தேவனுடன் நித்தியமான பிரிவை ஏற்படுத்தும்.

ஒருபோதும் தேவனோடு ஒன்றித்து வைத்திருக்காதபடி பெரிய பிரிவை பெருமை ஏற்படுத்தும். **வெளிப்படுத்தல் 20:10 மேலும் அவர் களை மோசம்போக்கின பிசாசானவன், மிருகமும் கள்ளத்தீர்க்கதரிசியுமிருக் கிற இடமாகிய அக்கினியும் கந்தகமு மான கடலிலே தள்ளப்பட்டான். அவர்கள் இரவும் பகலும் சதாகாலங்களிலும் வாதிக்கப்படுவார்கள்.** அப்படியென்றால் அவனுக்கு கொடுக்க வேண்டிய நியாயத் தீர்ப்பை தேவன் கொடுத்துவிட்டார். அவன் பெருமையைவிட்டு ஓயாததால், பெருமையாக செயலாற்றியதால் நித்தியமான தண்டனை கொடுக்கப் பட்டது. பெருமையோடு இருந்தால் நித்தியமான பகையை, பிரிவை நாங்களே ஏற்படுத்துகிறோம். பெருமைக் காரர் தேவனை துதிக்கமாட்டார்கள், ஆராதிக்கமாட்டார்கள். நாங்கள் தாழ்மையை அணிந்து கொண்டால் கர்த்தர் எங்கள் பக்கமாய் திரும்பி விடுவார். கர்த்தரோடு நித்திய ஐக்கியம், சந்தோஷம் வரும்.

## 3. பெருமை மனந்திரும்பாத விசுவாசத்தைக் காண்பிக்கும்.

பிசாசு ஒருநாளும் மனந்திரும்ப மாட்டான். பெருமை ஒரு நாளும், ஒருபோதும் மெய்யான மனந்திரும்பு தலுக்கு இடங்கொடுக்கவேமாட்டாது. யாராவது சத்தியம் சொல்லச்சொல்ல முரட்டாட்டம் பண்ணினால் அவர் களுக்கு பெருமை, பெருமை, பெருமை.

விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான் என்று வேதம் சொல்லு கிறது. இயேசு கிறிஸ்து மனிதனாய் பூமியிலே வாழ்ந்த போது பிசாசு அவரைக் கண்டு, அவைகளும் விசுவாசித்து, நடுங்கி, தேவனுடைய குமாரன் நீர் பரிசுத்தர் என சொன்னது. அவைகளும் இயேசுவை தேவனுடைய குமாரன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று விசுவாசித்தது, அறிக்கை செய்தது. ஆனால் மனந்திரும்பியதா? இல்லை. எங்களுடைய பெயரே விசுவாசி. பெருமையுள்ளவர்களாக இருந்தால் மனந்திரும்பாத விசுவாசியாகவே இருப் போம். பெருமை பாவத்தை அறிக்கை செய்யவிடாது: பெருமை மனந்திரும்பாத விசுவாசத்தைக் கொண்டிருக்கும்.

## 04. பெருமை தேவையற்ற கலக்கத்தைக் கொண்டு வரும்.

**மத்தேயு 2:1-4 (1.) ஏரோது ராஜாவின் நாட்களில் யூதேயாவிலுள்ள பெத்லகேமில் இயேசு பிறந்தபொழுது, கிழக்கிலிருந்து சாஸ்திரிகள் எருச லேமுக்கு வந்து, 2. யூதருக்கு ராஜா வாகப் பிறந்திருக்கிறவர் எங்கே? கிழக்கிலே அவருடைய நட்சத்திரத்தைக் கண்டு, அவரைப் பணிந்துகொள்ள வந்தோம் என்றார்கள். 3. ஏரோதுராஜா அதைக் கேட்டபொழுது, அவனும் அவனோடேகூட எருசலேம் நகரத்தார் அனைவரும் கலங்கினார்கள். 4. அவன் பிரதான ஆசாரியர் ஜனத்தின் வேத பாரகர் எல்லாரையும் கூடிவரச்செய்து: கிறிஸ்துவானவர் எங்கே பிறப்பாரென்று அவர்களிடத்தில் விசாரித்தான்.** இந்த வார்த்தைகளைக் கேட்ட போது, அவன் ஏன் கலங்க வேண்டும்? நான் தான் ராஜா, இன்னொரு ராஜாவென்றால் அதை அவனுடைய இருதயம் ஏற்றுக் கொள்ளவில்லை. மறைமுகமாக வெளியிலே சொல்லப்படாத, காண்பிக் கப்படாத பெருமை, எழுதப்படாத பெருமை ஏரோதிற்குள் மறைந் திருந்தது. அதனால் பெருமையின் வெளிப்பாடு தேவையற்றதுக்கெல்லாம் கலங்குவார்கள். எங்களுடைய அழுகை யிலும் பெருமை இருக்கும். ஆசீர் வதிக்கப்படவில்லை என்றால் கலங்கு வார்கள். சில பெருமைகள் கூட கண்ணீர் சிந்தி அழப்பண்ணும், கலங்கப் பண்ணும், வாட்டும், ஏன் கலங்குகி றீர்கள் என்று கர்த்தருடைய சமூகத்தி லிருந்து கேளுங்கள். பெருமையினால் கலங்கினால் இன்றோடு விட்டு விடுங் கள்.

## 05. பெருமை போலி ஆராதனை செய்யப்பண்ணும்.

**மத்தேயு 2:7-8 (7.) அப்பொழுது ஏரோது, சாஸ்திரிகளை இரகசியமாய் அழைத்து, நட்சத்திரம் காணப்பட்ட காலத்தைக்குறித்து அவர்களிடத்தில் திட்டமாய் விசாரித்து: 8. நீங்கள் போய், பிள்ளையைக் குறித்துத் திட்டமாய் விசாரியுங்கள்: நீங்கள் அதைக் கண்ட பின்பு, நானும் வந்து அதைப் பணிந்து கொள்ளும்படி எனக்கு அறிவியுங்கள் என்று சொல்லி, அவர்களைப் பெத்ல கேமுக்கு அனுப்பினான்.** அவன் உண்மையில் அவரை பணிந்து கொள்ள கேட்கவில்லை. பெருமை போலி ஆராதனை செய்யும். இது கஷ்டமான பகுதி. நாங்கள் கர்த்தருக்கு செய்கிற ஆராதனை நேர்மையாக இல்லாவிட்டால், உண்மையாக எங்களு டைய இருதயத்தால் துதிக்காவிட்டால், உண்மையான தேவன் மேசியா என்று அறிக்கை செய்யாவிட்டால், உள்ளத் தின் ஆழத்திலிருந்து போற்றாவிட்டால் நாங்கள் பெருமையுள்ளவர்கள், போலி ஆராதனை செய்பவர்கள். ஏரோது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிந்து கொள்ள வேண்டும் என்று சொன்னான். பணிந்து கொள்வது, தேவன் பெரியவர் என்று ஆராதிப்பதற்கு. எங்கள் எல்லோரையும் உருவாக்கிய சர்வவல்லவர் என்பதற்கு அடையாளம். ஏரோதிடம் தந்திரம் இருந்தது. கர்த்தரை உண்மையாக ஆராதிக்காவிட்டால் நாங்கள் பெருமைக்காரர். தேவனை துதிக்க, ஆராதிக்க பழகிக் கொள்ள வேண்டும். பிரசன்னத்தில் மூழ்கி அவரை உண்மையாக போற்ற வேண்டும். அவர் செய்த எல்லாவற்றிற்காகவும், மகத்துவத்திற்காகவும், அவர் மறுபடியும் வரப்போகிற கர்த்தர், நித்திய நித்தியமாக எம்மை தம்மோடு வைத்திருக்கப்போகும் தேவன் என்பதற்காகவும் அவரை போற்ற தெரிந்திருக்க வேண்டும். எங்களுடைய இழப்புக்களிலும், வேதனைகளிலும், வியாதியிலும் எங்களுடைய எதிர்பார்ப்புக்கள் வீணடிக்கின்ற போதிலும் அவர் ஒருவரே மாறாதவர் என்பதை அறிக்கை செய்கிற உண்மையான ஆண்டவருடைய பிள்ளைகளாக இருக்க வேண்டும்.

## 06. பெருமை நேரடியாக தேவ சத்தம் கேட்பவர்களை தவறாக புரிந்து கொள்ளப்பண்ணும்.

**மத்தேயு 2:12,16 (12.) பின்பு, அவர்கள் ஏரோதினிடத்திற்குத் திரும்பிப் போகவேண்டாமென்று சொப்பனத்தில் தேவனால் எச்சரிக்கப்பட்டு, வேறு வழியாய்த் தங்கள் தேசத்திற்குத் திரும்பிப்போனார்கள். 16. அப்பொழுது ஏரோது தான் சாஸ்திரிகளால் வஞ்சிக்கப்பட்டதைக் கண்டு, மிகுந்த கோபமடைந்து, ஆட்களை அனுப்பி, தான் சாஸ்திரிகளிடத்தில் திட்டமாய் விசாரித்த காலத்தின்படியே, பெத்லகேமிலும் அதின் சகல எல்லைகளிலுமிருந்த இரண்டு வயதுக்குட்பட்ட எல்லா ஆண் பிள்ளைகளையும் கொலை செய்தான்.**

சாஸ்திரிகள் தேவனுடைய சத்தத்திற்கு செவிகொடுத்தார்கள். ஆனால் சாஸ்திரிகள் தன்னை வஞ்சித்துவிட்டார்கள் என்று ஏரோது நினைத்தான். பெருமையுள்ளவர் தேவசத்தம் கேட்பவர்களை தவறாய் காண்பார்கள். ஆண்டவர் சொல்லுவது முக்கியமானது, அவசியமானது, அதைக் கேட்பதற்கு எங்களுடைய காதுகள் திறந்திருக்க வேண்டும். ஆண்டவருக்கு பயந்து, அவருடைய சத்தம் கேட்டு, வாழ்பவர்களுக்கு அவப்பெயர்கள் வரும். ஆண்டவருக்கு உண்மையாக வாழ்கிற போது மக்கள் எதிர்ப்பார்கள். தேவனிடத்திலிருந்து காரியம் பெற்றுக் கொள்கிற போது இன்னொருவர் உங்களைப் பற்றி குறைகூற முடியும். தேவனுடைய சத்தம் கேட்டு வாழ்கிற போது மனிதர்கள் வேறொரு அர்த்தத்தை கூற முடியும். நீங்கள் நேர்மையோடு செயலாற்றுகிற போது கள்ளத்தனம், வஞ்சகர், துரோகிகள் என்று மற்றவர்கள் சொல்ல முடியும். ஆண்டவரின் சித்தம், திட்டம், விருப்பம் எல்லாவற்றையும் சந்தோஷமாக ஏற்றுக் கொள்ளுங்கள். ஆண்டவரின் சத்தம் கேட்பவர்களையும் இப்படித்தான் கணித்தார்கள். ஆனால் அவர்கள் தேவனுடைய சொற்படி நடந்தார்கள். நீங்கள் தேவனுடைய சொற்படி நடவுங்கள் அது மிகவும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்தது. மற்றவர்கள் எதையும், எப்படியும் கூறிவிட்டு போகட்டும். அதை உங்கள் இருதயத்திலும், காதிலும் வைக்க வேண்டாம். கர்த்தர் எல்லா வற்றிற்கும் ஒருநாள் நியாயந்தீர்ப்பார்.

## 07. பெருமை அதிக கோபமும், இரக்கமற்ற செயலையும் செய்யப்பண்ணும்.

**மத்தேயு 2:16 அப்பொழுது ஏரோது தான் சாஸ்திரிகளால் வஞ்சிக் கப்பட்டதைக் கண்டு, மிகுந்த கோப மடைந்து, ஆட்களை அனுப்பி, தான் சாஸ்திரிகளிடத்தில் திட்டமாய் விசாரித்த காலத்தின்படியே, பெத்லகேமிலும் அதின் சகல எல்லைகளிலுமிருந்த இரண்டு வயதுக்குட்பட்ட எல்லா ஆண் பிள்ளைகளையும் கொலைசெய்தான்.** பெருமைக்காரருக்கு கொடூரமான கோபம் வரும். பெருமை இரக்கமற்ற செயல்களை செய்யப்பண்ணும். நீங்கள் இரக்கம் இல்லாதவர்களாக இருந்தால் மனந்திரும்புங்கள். ஆண்டவர் மன்னிப்பு தருவார். மற்ற வர்கள் உள்ளத்தை உடைத்து, கண்ணீர் சிந்தப்பண்ணி, அழப் பண்ணி, வேதனை பண்ணி... இப்படியாக நாம் இருக்கிற போது நாங்கள் பெருமையுள்ளவர்கள். சாஸ்திரிகள் வந்து கேட்டு, பிள்ளையை பார்த்துவிட்டு போனவுடன் அவன் இரண்டு வயதிற்கு உட்பட்ட எல்லா ஆண்பிள்ளைகளையும் கொலை செய்தான். இது உடனே நடந்த காரியம். காலம் தாமதித்து நடக்க வில்லை. ஆனால் தவறுதலாகக்கூட இயேசுவை தப்பவிடக்கூடாது என்பதற் காக தான் இரண்டு வயதிற்குட்பட்ட எல்லா ஆண்பிள்ளைகளையும் கொன் றான். இது இரக்கமற்ற செயல். இயேசு இரக்கம் உள்ள கர்த்தர், இரக்கத்தைக் காண்பித்தார், அதுபோல நாங்களும் இரக்கம் செய்ய வேண்டும்.

## 08. பெருமை தீர்க்கதரிசனங்களை ஏற்றுக் கொள்ளவிடாது: சத்தியத்தைப் புரிந்து கொள்ளவிடாது.

**மத்தேயு 2:4 அவன் பிரதான ஆசாரியர் ஜனத்தின் வேதபாரகர் எல்லாரையும் கூடிவரச் செய்து: கிறிஸ்து வானவர் எங்கே பிறப்பாரென்று அவர் களிடத்தில் விசாரித்தான்.** இயேசு பிறப்பார் என்று பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளால் அதிகமாக சொல்லப் பட்டிருந்தது. இயேசுவின் மனுவுருவின் பிறப்பை சாஸ்திரிகள் விளக்கமாக ஏரோதிற்கு சொன்ன பிறகும் அதை அவன் ஏற்றுக் கொள்ளவில்லை. பெருமைகள் தீர்க்கதரிசனங்களை ஏற்றுக் கொள்ளவிடாது, சரியான சத்தியத்தை புரிந்து கொள்ளவிடாது.

## 09. பெருமை மிக வேதனையான பின்விளைவுகளை ஏற்படுத்தும்.

**அப்போஸ்தலர் 12:21-23 (21.) குறித்தநாளிலே ஏரோது ராஜ வஸ்திரம் தரித்துக்கொண்டு, சிங்காசனத்தின் மேல் உட்கார்ந்து, அவர்களுக்குப் பிரசங்கம் பண்ணினான். 22. அப்பொழுது ஜனங்கள் இது மனுஷசத்தமல்ல, இது தேவசத்தம் என்று ஆர்ப்பரித்தார்கள். 23. அவன் தேவனுக்கு மகிமையைச்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செலுத்தாதபடியினால் உடனே கர்த்தருடைய தூதன் அவனை அடித்தான்: அவன் புழுப்புழுத்து இறந்தான்.** அப்போஸ்தலர் காலத்தில், இயேசுவின் காலத்தில் இருந்த ஏரோது ராஜாவின் பரம்பரையில் வந்த ஏரோது ஒருநாள் பிரசங்கம் பண்ணிய போது, இது மனிதனுடைய சத்தம் அல்ல, தேவனுடைய சத்தம் என்று சொன்னார்கள். ஏரோது அந்த மகிமையை கர்த்தருக்கு கொடாதபடியால் கர்த்தர் அவனை அடித்தார். அவன் புழுப் பிடித்து செத்தான். இதை அப்போஸ்தல நடபடிகளில் வாசிக்கலாம். பெருமை முழுமையான பின்விளைவுகளை, பாதிப்பை ஏற்படுத்தும். எங்களுக்கு வருகிற நன்மை, ஆசீர்வாதம், மகிமை எல்லாவற்றையும் கர்த்தருக்கு கொடுக்க வேண்டும். ஏனென்றால் கர்த்தர் தந்தார், கர்த்தருக்கே ஸ்தோத்திரம் என்று சொல்ல வேண்டும். பெருமை மகிமையை தனக்கு எடுத்துக் கொள்ளப் பண்ணும்: பெருமை அதிகமான வேதனைமிக்க பின் விளைவை ஏற்படுத்தக்கூடியது.

1. பெருமை தேவசித்தத்திற்கு விரோதமாக செயலாற்றப்பண்ணும்.

2. தேவனுடன் நித்தியமான பிரிவை ஏற்படுத்தும்.

3. பெருமை மனந்திரும்பாத விசுவாசத்தை காண்பிக்கும்.

4. பெருமை தேவையற்ற கலக்கத்தைக் கொண்டு வரும்.

5. பெருமை போலி ஆராதனை செய்யப்பண்ணும்.

6. பெருமை தேவ சத்தம் கேட்பவர்களை தவறாக புரிந்து கொள்ளப் பண்ணும்.

7. பெருமை அதிக கோபமும் இரக்கமுமற்ற செயலை செய்யப்பண்ணும்.

8. பெருமை தீர்க்கதரிசனங்களை ஏற்றுக் கொள்ளவிடாது: சத்தியத்தை புரிந்து கொள்ளவிடாது.

9. பெருமை மிக வேதனையான பின்விளைவுகளை ஏற்படுத்தும்.

சத்தியத்தை கற்றுக் கொண்டு பெருமையை விட்டு விட்டு ஆண்டவர் எதிர்பார்க்கிற நிலையில் வாழ்வோம்.

**'தேவன் தாமே உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக'**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப் போட்டி - 119

## சரியான பதில்கள்

**இடமிருந்து வலமாக**

01. நெபாயோத் (1நாளாகமம் 1:29-31)
04. எல்க்கானா (1சாமுவேல் 1:23)
06. வாயையும் (நீதிமொழிகள் 21:23)
08. தபேரா (எண்ணாகமம் 11:3)
09. எலியா (11இராஜாக்கள் 1:16)
12. சிமியோன் (யோசுவா 19:9)

**வலமிருந்து இடமாக**

03. நாத்தான் (1நாளாகமம் 17:2)
05. சாலொமோன் (1இராஜாக்கள் 3:7)
07. யாக்கோபு (மாற்கு 3:17)
08. தமஸ்கு (ஆதியாகமம் 15:2)
10. பிலிப்பு (மத்தேயு 10:3)
11. பெல்ஷாத்சார் (தானியேல் 5:11)
13. எப்ரோன் (11சாமுவேல் 2:1)

**மேலிருந்து கீழாக**

01. நெகேமியா (நெகேமியா 2:1)
02. யோவதானாள் (11நாளாகமம் 25:1)

**கீழிருந்து மேலாக**

09. எசேக்கியா (11இராஜாக்கள் 20:3)
12. சிம்சோன் (நியாயாதிபதிகள் 16:28)
13. எப்பிராயீம் (ஆதியாகமம் 41:52)



# குறுக்கெழுத்துப் போட்டி - 119, வினா விடை - 121

## சரியான விடை எழுதியவர்கள்

**புங்குடுதீவு**
01. எஸ்.சுதாமதி


**அனலைதீவு**
02. க.நிதர்சிகா
03. ச.சர்பினா
04. சலோமி

**காரைநகர்**
05. நா.அன்னாள்
06. வி.அனுராதா

**பாண்டவெட்டை**
07. சி.சிவனேஸ்வரன்
08. சி.சுமித்திரா

**மானிப்பாய்**
09. வி.கல்பனா

**திருநெல்வேலி**
10. ந.செல்வன்




*வினாவிடை மட்டும் சரியாய் எழுதியோர்
+குறுக்கெழுத்துப்போட்டி மட்டும் சரியாய் எழுதியோர்
இரண்டும் சரியாய் எழுதியோர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவன் தந்த வைரங்கள்

சத்தியங்கள்
எல்லாம்
அனுபவங்களாகலாம்,
ஆனால்
அனுபவங்களெல்லாம்
சத்தியங்கள் அல்ல.

எழுதப்பட்ட வார்த்தை
பிரசங்கியுடன்
பேசியிருக்க வேண்டும்.
பிரசங்கி பேசப்பட்ட
வார்த்தையைப்
பேசும்போது அது
ஜனங்களுடன் பேசும்

உயிருள்ளவரைதான்
உறவுகள், அதை
உண்மையுள்ளத்துடன்
காத்துக்
கொள்ளுங்கள். உயிர்
போன பின்பும் உறவில்
இருப்பவர் தேவன்.
அந்த உறவு
உண்மையாக
இருப்பதற்கு
தூய்மையாக
வாழுங்கள்

மனிதனுக்குள்
பாவத்தைக் கொண்டு
வருவதற்கு சர்ப்பம்
பேசிய வார்த்தைகள்
'ஆசீர்வாதமும்
நன்மையுமே' "சாகவே
சாவதில்லை;
தேவனைப்போல
இருப்பீர்கள்"

தேவசத்தியத்துக்கு
மாறாக ஒருவனை நீ
நடத்தினால் நீ
சத்துருவால்
நடத்தப்படுகிறாய்

தேவனுடைய
வார்த்தைக்கு பிசாசு
கொடுத்த முதல்
விளக்கமே
வசனப்புரட்டு

—— *Ps. VM* ——



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கெட்ட பையனா?

**வேதப்பகுதி: பிரசங்கி 10:1-10**

அனுக்கிரகன் எல்லா மாணவர்களைவிட மிக நன்றாக ஆடைகள் அணிவான். மிகவும் சுத்தமாக இருப்பான். தன்னுடைய பொருட்களை மிகவும் ஒழுங்காக வைப்பான். பள்ளிக்கூடத்திற்கு சரியான நேரத்திற்கு வருவான். தேவையில்லாத பொருட்களை கண்ட இடத்தில் வீசி எறியமாட்டான். ஆனாலும் அவனுடைய வகுப்பு ஆசிரியர் அவனை கெட்டப்பையன் என்றார். இவ்வளவு நல்ல பையனை அவர் ஏன் கெட்ட பையன் என்றார்?

அவன் பல விஷயங்களில் நல்ல மாணவன். ஆனால் பிற மாணவர்களை வம்புக்கு இழுப்பான். எவ்வளவு சொன்னாலும் கேட்காமல் குறும்பு செய்வான். ஆம், நம்மிடம் நல்ல பல குணங்கள் இருக்கலாம். ஆனாலும் சில கெட்ட குணங்கள் இருந்தால் நமக்கு நல்ல பெயர் கிடைக்காது. ஆகவே எல்லா விஷயங்களிலும் நல்லவர்களாயிருக்க வேண்டும்.

**சிந்தனைக்கு:-**

**நம்மிடம் பல பக்தியான காரியங்கள் இருக்கலாம். ஆனாலும் சில தவறான காரியங்கள் இருந்தால் தேவ ஆசீர்வாதம் கிடைக்காது.**

நன்றி: 'சின்னஞ்சிறு இதயங்களே கேளுங்கள்' – மே 02

# அனல் சந்தா விபரம்

இச் சஞ்சிகையைத் தொடர்ந்து பெற விரும்புகிறவர்கள் உங்களது பெயரையும், முகவரியையும் தெளிவாக குறிப்பிட்டு சந்தாப்பணத்துடன் ஆசிரியருக்கு அனுப்பி வைத்தால் சந்தாதாரர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுவீர்கள்.

(காசோலை, காசுக்கட்டளை அனைத்தும் "சீயோன் தேவாலயம்" / **ZION CHURCH** என எழுதப்பட வேண்டும்)

## சந்தா விபரம் (தபால் செலவு உட்பட)

Subscription (Per Year S.L. Rs)

| | |
|---|---|
| இலங்கை (Sri Lanka) | 660.00 |
| இந்தியா (India) | 1200.00 |
| கனடா, அமெரிக்கா (Canada & USA) | 1400.00 |
| சிங்கப்பூர், மலேசியா (Singapore & Malaysia) | 1200.00 |
| மத்திய கிழக்கு நாடுகள் (Middle East Countries) | 1500.00 |
| ஜேர்மனி, இங்கிலாந்து, இத்தாலி, அவுஸ்ரேலியா (Germany, England, Italy & Australia) | 1500.00 |

*சந்தாதாரராக விரும்பின் பின்வரும் மாதிரிக் கூப்பனை தயார் செய்து சந்தாப்பணத்துடன் சேர்த்து அனுப்பி வைக்கவும்.*

## சந்தா மாதிரிக் கூப்பன்

பெயர்:.....................................

முகவரி:.....................................

.............................................

.............................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அச்சமைப்பு: வைத்தி பதிப்பகம் - தொ.பே: 0772002351
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org